# மணப்பாறை நகராட்சி

**2021- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் (13.08.2021) 13 - ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 13.08.2021 | **பொருள் - 1**<br>மணப்பாறை நகராட்சிக்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 7வது திட்டம் அனுமதி வழங்கும் கூட்டத்தில் மணப்பாறை மாவட்ட தலைமை மருத்துவ வளாத்தில் உள்ள மருத்துவமனையில் நோயாளிகளை பார்க்கவரும் பார்வையாளர்கள் மற்றும் பாதுகாவலர்களுடன் தங்குபவர்களுக்கு தங்க கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.90.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (NULM 7th Project sanction committee meeting approval dated 07.01.2021) அதனை தொடர்ந்து விரிவான திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்து தொழில் நுட்ப அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br><br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 455/2020/இ1 | **தீர்மான எண்.974**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 13.08.2021 | **பொருள் - 2**<br>திரு.காசிநாதன் மற்றும் ஆறுநபர்கள் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் (WA. No) 1301/2012 மற்றும் 2618/2012 முதல் 2623/2012 வரை உள்ள வழக்கில் 14.06.2019 ம் நாளிட்ட தீர்ப்பிற்கு அரசு கடிதம் எண் 35928/ME III/ 2010-28, நாள் 10.01.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்.57650/2010/ v¥2 eh s¦ 10.01.2020 மற்றும் 31.01.2020-ன்படி உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய அறிவுறுத்தப்பட்டதின்படி உச்சநீதிமன்றத்தில் 07.03.2020 அன்று வாதியுரை தாக்கல் செய்யப்பட்டு சிறப்பு விடுப்பு மனுவிற்கு | **தீர்மான எண்.975**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

கீழ்கண்டவாறு (Special Leave Petition) டைரி எண் (DAIRY NO) பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | மேல்முறையீடு வழக்கு எண் | பெயர் | உச்சநீதிமன்றத்தில் பெறப்பட்ட Diary No. |
|---|---|---|---|
| 1. | WA No 1301/2012 | திரு.டி.காசிநாதன் | 9536/2020 |
| 2 | WA No 2618/2012 | திரு.டி.வெங்கடேசன் | 9504/2020 |
| 3 | WA No 2619/2012 | திரு.பி.முத்தழகன் | 9532/2020 |
| 4 | WA No 2620/2012 | திரு.சி.நரசிம்மன் | 9502/2020 |
| 5 | WA No 2621/2012 | திரு.ஜி,அண்ணாதுரை | 9520/2020 |
| 6 | WA No 2622/2012 | திரு.எஸ்.குமார் | 9542/2020 |
| 7 | WA No 2623/2012 | திரு.கே.சசிக்குமார் | 9538/2020 |

இந்நிலையில் தற்போது Thiru.L.S.M.HASANFIZAL, அரசு வழக்கறிஞர் அவர்களின் 11.08.2021ம் தேதி கடிதத்தின்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் (WA.No) 1301/2012 மற்றும் 2618/2012 முதல் 2623/2012 வரை உள்ள வழக்கின் தீர்ப்பாணையினை செயல்படுத்தப்படவில்லையென தெரிவித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசுசெயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் ஆணையர், மணப்பாறை நகராட்சி ஆகியோர்களை பிரதிவாதியாக சேர்த்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கீழ்கண்டவாறு தொடரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

| வ. எண் | பெயர் | மேல்முறையீடு வழக்கு எண் | உச்சநீதிமன்றத்தில் பெறப்பட்ட Diary No. | ***தற்போது சென்னை உயர்நீதிமன்றத்தில்தொடர்ந்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்*** |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஜி.அண்ணாதுரை | WA No 2621/2012 | 9520/2020 | CP No.626/2021 |
| 2 | திரு.கே.சசிக்குமார் | WA No 2623/2012 | 9538/2020 | CP No.585/2021 |

மேலும் மேற்கண்ட வழக்கிற்கு, வழக்கு கட்டணம் மற்றும் தயார்செய்யப்படும் ஆவணங்களுக்குரிய செலவு கட்டணம் ஆகியவற்றிற்கு தலா ரூ.20,000/- வீதம் இரண்டு வழக்குகளுக்கு ரூ.40,000/- வழங்க கோரியும் கடிதம் அனுப்பியுள்ளார். எனவே மேற்கண்ட வழக்கின் அவசர அவசியம் கருதி வழக்கு கட்டணம் ரூ.40,000/- அய் அரசு வழக்கறிஞருக்கு வழங்கவும், செலவின தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

அனுமதிக்கலாம்

| | | |
|---|---|---|
| 13.08.2021 | **பொருள் - 3**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட செவலூர் கிராமம், விடத்திலாம்பட்டி பகுதி, சர்வே வார்டு “A“ பிளாக் “3“ T.S.No 9/17 என்ற அமைவிடத்தில் FSTP-2018-2019 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.260.00 லட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.26888/UGSS-2/2018-27 நாள்.29.01.2019-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு 26888/2018/D02 நாள்.28.02.2019-ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி 02.07.2019- ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள SRI GANESH & CO, அண்ணா நகர் விராலிமலை ரோடு, மணப்பாறை நிறுவனத்திற்கு 18.07.2019- ம் தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. வார்டு -A, பிளாக்-3ல் நகரப் புல எண்:9/17- ல் பரப்பு ஹெக் ச.மீ 2.03.0 நிலத்தினை கசடு கழிவு மேலாண்மை திட்டத்திற்காக இந்நகராட்சி ஆணையர் முன் நுழைவு செய்ய அனுமதி 04.03.2020-ம் தேதி வழங்கப்பட்ட இடத்தில் நகராட்சி மூலம் பாதுகாப்பு சுவர் (Precast Slab) அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியை துவங்கும் பொழுது அருகில் உள்ள விடத்திலாம்பட்டி பகுதி பொது மக்கள் பணியை செய்யவிடாமல் தடுத்து விட்டார்கள். மேற்கண்ட விடத்திலாம்பட்டி சர்வே எண்.9/1,2 – ல் ஒதுக்கப்பட்டுள்ள கசடு கழிவு மேலாண்மை திட்டத்திற்காக இடத்தினை சுற்றி Precast Slab Compound Wall அமைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. எனவே, நகராட்சி மூலம் Precast Slab Compound Wall அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 9.92 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவின தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம். | **தீர்மான எண்.976 அனுமதிக்கப்பட்டது** |
| 13.08.2021 | **பொருள் - 4**<br>இந்நகராட்சியில் 2020-21 நிதியாண்டில் ஒப்பந்ததாரர்கள், குத்தகைதாரர்கள் மற்றும் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி, சரக்கு மற்றும் சேவை வரிகளை சம்மந்தப்பட்ட அரசுத்தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதை E-Filling,E-TDS மூலம் தாக்கல் செய்ததற்குரிய கட்டணம் ரூ.38,000/-அய் கீழ்க்கண்டவாறு திரு.எம்.செந்தில்நாதன், ஆடிட்டர், மற்றும் | **தீர்மான எண்.977 அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td>திரு.எம்.மகாலிங்கம் ஆடிட்டர், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு வழங்கவும், செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>E-Filling, E-TDS மேற்கொள்ளப்பட்ட விபரம்</th><th>பெயர்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>சரக்கு மற்றும் சேவைவரி</td><td>திரு.எம்.மகாலிங்கம்</td><td>ரூ.18,000/-</td></tr>
<tr><td>2.</td><td>வருமானவரி (பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள்)</td><td>திரு.எம்.செந்தில்நாதன்</td><td>ரூ.20,000/-</td></tr>
<tr><td></td><td colspan="2">மொத்தம்</td><td>ரூ.38,000/-</td></tr>
</table>
<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>13.08.2021</td>
<td>பொருள் - 5<br>
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5437/2021/J1, நாள்.23.05.2021 மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சி அவர்களின் நேரடி அறிவுரை நாள்.08.06.2021-ன்படியும், மணப்பாறை நகராட்சி 27 வார்டு பகுதிகளில் 09.06.2021 முதல் 08.07.2021 வரையிலான காலங்களில் கொரோனா தடுப்பு பணிக்காக மாதா மகளிர் சுய உதவிக்குழுவினர் மூலம் காய்ச்சல் கணக்கெடுப்பு பணி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் மேற்கொண்டமையும் அதற்கான செலவினம் ரூ.108519/- பொது நிதியில் மேற்கொண்டமையும் மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
பதிவு செய்யலாம்<br>
(1003/2020/எச்2)</td>
<td>தீர்மான எண்.978<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 13.08.2021 | **பொருள் - 6**<br>இந்நகராட்சியில் தட்டச்சுப்பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருவதில், மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.J3/8629/2021 நாள்.20.07.2021-ன்படி தட்டச்சுபணிக்கு தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.536/- வீதம் வழங்க உத்திரவிட்டதின்படி, 08/2021 முதல் நாள் ஒன்றுக்கு ரூ.536/- வீதம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கும், செலவின தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.979**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**